**பிங்கிரிய பிரதேச சபை - 2023**
**--------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிங்கிரிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பிங்கிரிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 3,158,358 தொகைக்கான 03 கட்டிடங்களின் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2024 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திண்மக் கழிவுப் பொருள் நிலையத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 04 கைவண்டிகளின் பெறுமதி ரூபா 106,000 தொகை பரிந்துரை ஒன்று இன்றி மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | 2024 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 362,140 தொகைக்கான மருந்து வகைகளின் பெறுமதி கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்திருக்காத 03 வழக்குகள் காணப்பட்டதுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிகழக்கூடிய பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணி கட்டிடங்கள், ஊழியர் பிணை, மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் ஆகிய கணக்கு விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 13,635,962 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிதிக்கூற்றுக்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய அட்டவணைகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 | சபையினால் 2018 இற்கு முன்னர் வழங்கியிருந்த ரூபா 358,252 தொகைக்கான 16 முற்பணங்கள் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் ரூபா 822,418 தொகைக்கான இனங்காணப்படாத முற்பண மீதியொன்று தீர்த்திருக்கவில்லை. | | |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 571(2) | காலவதியாகிய வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 292,912 தொகை பெறுமதியான காலவதியாகிய வைப்புக்களை திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது அரச வருமானத்திற்கு எடுப்பதன் மூலம் தீர்த்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) | 2022 பெப்ரவரி 25 திகதிய 1/2022 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களுக்காக 2023 ஆண்டிற்குரிய வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2015 நவம்பர் 02 திகதிய உள்ளூராட்சித் திணைக்களத்தின் சுற்றிக்கை இலக்கம் 03/2015 | வீதி விளக்குப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | 2018/07/19 திகதிய இலக்கம் 2018/e – local government 01 சுற்றறிக்கை | இணையத்தினூடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கு மற்றும் கொடுப்பனவு செய்வதற்கு பிரஜைகளுக்கு வசதிகள் ஏற்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | 2010 ஜூலை 30 திகதிய உள்ளூராட்சி திணைக்களத்தின் 2010/02 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 1.2. ii. | விடயங்களை மாற்றும் முறைமை மற்றும் அவ்வாறு மேற்கொள்ளல் வசதியீனமான உத்தியோகத்தர்களுக்காக 02 வருடங்களுக்கு ஒருமுறை பிரிவு மாற்றும் முறையொன்று செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| | | | - | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) | விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக பட்டியலொன்று மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை ஒன்று ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் வீதவரி எழுதுனரினால் தயாரிக்கப்பட்டு தலைவரின் கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | விதி 218 | நியமனம் செய்யப்பட்ட சபையொன்றினால் வருடாந்த காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 40,744,083 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 77,412,377 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் 2023 ஆண்டு திசெம்பர் மாதம் வங்கி இணக்கக் கூற்றின் படி பல வருட காலம் முதல் காணப்படுகின்ற இனங் காணப்படாத ரூபா 181,846 இற்கான வரவு மீதியை இனங்காண்பதற்கு மற்றும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஊழியர் பிணை வைப்புக்களின் பெறுமதி ரூபா 243,499 தொகை எனினும், அவற்றில் ரூபா 167,674 தொகை மாத்திரம் முதலிடப்பட்டிருந்தமையால் ரூபா 75,825 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

### 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | ஆண்டு 2023 | | | | ஆண்டு 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 5,960 | 17,613 | 5,189 | 87 | 4,692 | 1,707 | 3,209 | 179 |
| ii. | வாடகை | 20,902 | 6,799 | 17,715 | 20 | 20,872 | 6,629 | 14,525 | 118 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,466 | - | 2,219 | - | 1,802 | - | 1,564 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 67,483 | - | 64,266 | - | 115,603 | - | 84,637 | - |
| | மொத்தம் | 96,811 | 24,412 | 89,389 | 107 | 142,969 | 8,336 | 103,937 | 297 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 43,420 தொகை மற்றும் நிலுவை ஏக்கர் வரி ரூபா 37,591 தொகையும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலுவை வீதவரியை அறவீடு செய்ய எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2012 ஆண்டு முதல் 05 இறைச்சிக் கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 381,650 இற்கான நிலுவை குத்தகையொன்று காணப்பட்டது. | - மேற்படி - | நிலுவை மீதிகள் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | வீரபொகுன வாராந்த சந்தையில் பன்றி இறைச்சிக் கடைக்காக 2012 மற்றும் 2013 ஆண்டுகள் தொடர்பாக முறையே அறவிடப்பட வேண்டிய ரூபா 241,038 தொகை மற்றும் ரூபா 38,100 இற்கான நிலுவைக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 ஆண்டு தொடர்பாக மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 8,489,208 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,468,525 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் அறவிடப்பட வேண்டியிருந்தது. | - மேற்படி - | நிலுவை மீதிகளை விரைவாக தருவித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவதற்திற்காக ரூபா 2,369,562 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 350,335 இற்கான வருமானம் ஒன்று மாத்திரம் உழைத்திருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | உக்கக்கூடிய அல்லது உக்காத குப்பைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்கும் வருமானம் உற்பத்தி அலுவல்களை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 09 கணக்குகளின் பெறுமதி ரூபா 43,411,464 தொகை காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 செலுத்த வேண்டிய கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 87,309,439 தொகையாகக் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பிரதேச சபையில் பதிவு செய்துள்ள 15 சனசமூக மன்றங்களுக்கு 2020 ஆண்டின் போது 725 கதிரைகள், 14 ஸமர்கட்கள் மற்றும் 28 பிளேஸ் லைட்கள் சபையினால் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பண்டங்கள் சமூக மன்றங்களினால் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | பல வருட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 249,853 இற்கான இனங்காணப்படாத ஊழியர் கடன் மீதிகள் காணப்பட்டதுடன், அவற்றை இனங்கண்டு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | ஊழியர் கடன் உரிய முறையில் அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் நாளதுவரையாக்கி இருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (ஆ) | வீதி விளக்குப் பதிவேடு மற்றும் தரவு முறையினை நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. | - மேற்படி - | வீதி விளக்குப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 18 விளையாட்டு மைதானங்கள் இனங்கண்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை அவற்றின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபையினால் பராமரிக்கப்படுகின்ற 122 மயானங்கள் காணப்பட்ட போதிலும், அவற்றில் 40 மயானங்களின் காணிகளின் உரிமை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 01 வெற்றிடமும் 03 மிகைகளும் காணப்பட்டன. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | பதவியணி தேவைப்பாடுகளை கால ரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 26/2014 இன் கீழ் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை மேற்கூறிய பதவிகளுக்கான அங்கீகாரம் கிடைத்திருக்காத 5 ஊழியர்கள் காணப்பட்டனர். | - மேற்படி - | - மேற்படி - |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 மோட்டார் வாகனங்கள் 2023 நவம்பர் 08 திகதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீள்மதிப்பீட்டு பெறுமதிக்கு இணங்க சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலையான சொத்துக்கள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 245,500 தொகை கிரயப் பெறுமதியினைக் கொண்ட சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த இலக்கம் காணப்படாத நீர் பவுஸர் 2023 ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) நிதிப் பிரமாணம் 1647(உ) இற்கு இணங்க சபையினால் வாகனப் பதிவேட்டில் சபைக்குச் சொந்தமான டேலர் தொடர்பான தகவல்கள் உட்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட மோட்டார் கார் ஒன்று மற்றும் 32 – 0963 இலக்கம் கொண்ட வாகனத்தின் உரிமை கணக்காய்வுத் திகதி வரை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 வருமான விடயங்களில் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் இடையே 59 சதவீதம் முதல் 134 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதுடன், 77 செலவு விடயங்களில் மதிப்பீட்டு செயற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே 75 சதவீதத்தை விட கூடிய முரண்கள் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | வருமான மதிப்பீடு கூடியளவு யதார்த்தமாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030 குறிக்கோள்களை நெருங்குவதற்காக மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட 27 செயற்திட்டங்களில் 13 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நெருங்க வேண்டும். |
| (ஆ) நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்காக ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்த 14 செயற்திட்டங்களுக்காக ரூபா 7,400,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறான மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 2,757,220 தொகையாக காணப்பட்டமையால் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |